உ

திருவாவடுதுறை

சுப்பிரமணிய சுவாமிகளாலியற்றிய

# சுப்பிரமணியர் விருத்தம்.



சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ

அவர்களாற்றமது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

சிவமயம்.

# சுப்பிரமணியர் விருத்தம்.

மாமேவுநவரத்தின கேயூரணி மகுடமண்ணிப் பொலிந்தமுடியும், வச்சிரநுகற்றிலகு வெண்ணீருமோராறுவதனவிம்பத்தினழகும், பாமேவுபத்தருக்கு மடைதிறந்தன்பொழுகு பன்னிருவிழிக்கருணையும்,பகரறியபழமறைபழுத்தொழுதுசிறுநகைப்பவளஞ்சிறந்தவாயும், காமேவுகாகமலபந்தியுஞ்சேவலுங் கனகமயிலுங்கிண்கிணிக், காலுமுந்நூலும் வடிவேலுமென் மேலுமெக்காலந்துலங்கவருவாய், தாமோதரானந்த கோவிந்தவைகுந்த சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்ந்த சரவணபவாநந்தனே. 1

கண்கொண்டபூச்சக்கர வாளகோளத்தையொருகதிகொண்டெழுந்துகற்றிக், கனககூடந்தடவியுகசண்டமாருதக்காலொடுகெழன்றுபின்னிவிண்கொண்டமேகபடலத்தைச்சினந்துதன் மெய்யன்பனெனவுகந்து,விடவரவினமகுடமுடிசடசடெனவுதரிநடுமே

ருவொடு பாய்ந்துகொத்தித், திண்கொண்டவல்லசு
ரர்நெஞ்சுபறை கொட்டத்திடுக்கிடவெடுத்துமோதி
த்திறைகொண்டனைத்திலகுதிரைகொண்டமயில்வா
கனு;தண்கொண்டநீபமலர் மாலையணிமார்பனே சர
சகோபாலன்மருகா, மதுர்மறைகளே தந்த பரமகுரு
வாய்வந்த சரவணபவாநந்தனே. 2

கன்னிகயிலாயகிரி மேருகிரிகந்தமலைதோகைம
லைசயிலைபலைவான்,சோலைமலைமேவியவிராலிமலைமன்
னியசுவாமிமலையுஞ்சிறந்த, சென்னிமலைவேளூர் கட
ம்பவனமேலைவயறிருவருணையின் கோபுரம், திருவா
வினன்குடி பரங்கிரி திருத்தணிகைசிவாசலந்திருவே
ரகம் இன்னிலமதிக்குந்திருச்செந்தின்முதலானவெ
ண்ணப்படாதகோடி; எத்தலமுநீகருணை,வைத்துவி
ளையாடல்வித மெத்தனைச்சொல்லுமேன்,தன்னைநிக
ரொவ்வாத பன்னிருகைவேலனே சரசகோபாலன் ம
ருகா சதுர்மறைகளே தந்த பரமகுருவாய்வந்த சரவ
ணபவாநந்தனே. 3

நதியெங்குமூழ்கித் தலந்தோறுஞ்சுற்றியு நல்ல
நியமங்கள்செய்தும், நானென்ற வாணவந்தள்ளினே
னென்றுசிலஞானங்கள்பலபேசியுங், கதிகொண்டம

வுனியாயட்டமாசித்தியொடு கற்பந்தனைப்புசித்தும் கண்ணிமைகண்மூடிச் சிவானந்தமென்றுசெயல்கண் டிருந்தோமென்னவும்,எதிரொருவருக்கொருவரதற் கித்துமற்கட்டியிப்படி யணந்தங்கோடி,இதுவல்லவ துவல்லவென்றுபோராடுவது மென்னவகைபோவறி கிலேன் சதமென்னவுன்னைநா னம்பினேன்நம்பினே னசரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவாநந்தனே. 4

நாரதப்பிரமாதியமரர்கன்னரருரகர் நாரணன் முதற்பண்ணவர், நடுக்கம்பொருந்தியவிடுக்கண்களைந்திடநடுக்குங்குழந்தைவயதில், சூரபத்மாசுரன் கயமுகன்முருகன் துன்முகனுபானுகோபன், துட்ட வஞ்சச் சரவுஞ்சாசுரன் சிங்கனொடுகெற்றிடவரக்கரையெல்லாம் கோரசங்காரண தூளிபடலங் கொண்டு சுழுடியுனது வெற்றிக் கொடியேற விந்த்ரன்மணி முடியேற வானூடு குடியேறவைத்ததுரையே, காரணியின்மேவு பரிபூரணவுலாசன சரச கோபாலன் மருகா,சதுர்மறைகளேதந்த பரம குருவாய்வந்தசரவணபவானந்தனே. 5

சிவமிகுதற்பரனை யுன்னித்த தேகத்தியானத் தெழுந்து பொங்கிச்,சில்லென்று மெய்மறந்தானந்த

மவனஞ் ஜெனிக்கக்குவிந்துகண்ணீர் ஆவிபொழியக்
கருணையுள்ளங்கனிந்துருகவன்புருகவென்புருகவே,
அங்கங்குழைந்துபுளகிக்கநின்றகுருவாரப்படிமொ
ன்றறிவனே, காலங்கழித்துண்டு வீணுக்கலைந்துபல
காலப்பிரபஞ்ச மாயக், கடற்குட்படிந்தேகிடக்கின்
றபாசங்கடக்கும் படிக்கருளுவாய், தாலமுழுதுண்டு
நிலைகண்ட கோகண்டமாசரசன் கோபாலன்மருகா,
சதுர்முறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவா
நந்தனே. 6

கல்லாலெறிந்துஞன் னெச்சிலைத்தந்துபின்கண்
ணைப்பறித்துவைத்தும், கருதுவசைசொல்லியுஞ்செ
ய்பசிறுமைந்தனைக் கறிசமைத்துண்ணவைத்தும், வி
ல்லாலடித்துமோர் மாயலிற்றன்னுடைய விரதஞ்செ
லுத்துவித்தும், வேலையிற்றானெடுசுழன்றும் பிரா
னுக்குமெய்யன்பனெனநடந்தும், நல்லாரெனப்பேரு
பெற்றார்களது பண்டை நான்செய்த பூசையீசனன்
கிருபையாமெனக்குன் கிருபையல்லாது நாடுவது
வேருமுளதோ, சல்லாபவுல்லாசவில்வேருவல்லாள
சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரம
குருவாய்வந்த சரவணபவாநந்தனே. 7

அற்புத மிகப்புகழ் திருப்புகழ் விருப்பொடு சொலருணகிரிதனையுகந்தாய், அய்பவின் பமுருகும் மமுனிமுன்புவரவன் புருருபண்புரைத்தாய், உற்ப னவரக்கனொடு சர்ம்பனமனப்பபமுற்றநற்கிரனொரு நாள் உன்சலிகை தஞ்சமெனநெஞ்சுருக வஞ்சகிர வுச்சநேர்கிரிபிளந்தாய்; எப்படியுமுற்படும் வினைப் பயனிலைப்புமதை யிப்புயிலேறுமய்பா, யிதுகலிகால மென்றெண்ணவொண்ணுது நானேழையடி யேனு கையால், தற்பரதயாபரமனோரதர் மகிழ்ந்துதவுபரச ரோபாலன்மருகா, சதுர்முறைகளேதந்த பரமகுரு வாய்வந்த சரவணபவாநந்தனே. 8

தீராதமாயச்சுகந்தந்தவிக்கவுஞ செனனஞ்செ ழித்தபின்பு,செகதலமயக்கமதிலேஎன்குடித்தலந்தீ யமருளோர்வங்கணம்,போராடுஞ்சஞ்சாரபாசபந்தம் மிதிற்போகமடவாரிணக்கம், பொறிவாயலைக்குமீது ள்ளபடிமுன்வினைப்போகந் தொடர்ந்தநெரியால் ஆ ராலுமுடிவாராதானுலிதற்கு நல்லறிவென்ன தீபமொ ண்டண்டவ்வழியிலே மனஞ்செல்லாமலலைகிள்றவடி யேனையாட்கொள்ளுவாய்தாரேறுபன்னிருபுயாசலக்

கடவுளேசரச கோபாலன் மருகா, சதுர்மறைகளே தந்தபரமகுருவாய்வந்த சரவணபவாநந்தனே. 9

தறுகாமமோகமுறுதிமிதிமிங்கிலமிக்கதனமோடுமனமுதலையாம், தற்கோபவனல்வடவை மூடத்துவம்பாச்சஞ்சலமெனும் தாளகம், அரியவெவ்வொருகுமிழியஞ்ஞானவாரிதியி லலைகின்றசிவராசியத்தனையுமீனென்னநீ வீசுவலை வீழ்வரவு யிரில்யானுமொருவன்கருதரியாபாரப் பெருங்கடல்கடந்தேகடகவேதோரதனுமென்றால், கைத்தவலையில்லை யினியேன்செப்குவேனுனதுகாற்றவளை .கைப்பற்றினேன் சரியமர்செயனெடியபயை சூரகஜசிங்கமேசரச கோபாலன்மருரா, சர்துமறைகளே தந்த பங்ம குருவாய் வந்த சரவணபவாநந்தனே. 10

நூயபொறியைந்தையு மடக்கிப் புலாதிகள் சுழல்கின்றவருமறித்துச், சுழிமுனைதிறந்து மூலாதாரமேலாந்து வாத்சாந்தத்தை முட்டி, வாயுவை யிருக்கிப் பிலத்துவருகுண்டலியைவவ்விமேகொண்டெடுத்து, வாசியைநடத்தி பல்வோசைபைத் தாவென்றுவழிகொண்டு நாதவெளியில், தோயும் பரப்பிர்ம்ம பூரணவிலாசமது சோதிப்பதென்ன வெளி

தோ, தொலையாத நிலையாத தகையாலுன் பதந்துணை பற்றினேன், தாயகமனோகர மயூரரெகனமுருகசரச கோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுரு வாய்வந்த சரவணபவாநந்தனே. 11

கண்ணேறு வாராது பிணியொன்று சேராது, கவனுப்படாதுநெஞ்சங், கலியாதுசலியாது மெலியாது கலியென்றபேயடாது, விண்ணேறுமணுகாது கன்மவினைதொடராது, விஷமாச்சுரம்வராது, வெய்ய பூதம் பில்லிவஞ்சனைகடொடரா விஷம்பரவுசெந்துமடரா, எண்ணேறுசன்னங்கள் கிடையாதுகாலபய மெவ்வளவுமேயிராதிவ், வேழைக்கிரங்கியருடெய்வமுனை யல்லாமலின்னமொரு தெய்வமுண்டோ தண்ணேறுதங்கை மலைமங்கையருடங்கமே சரசகோபாலன்மருகா சதுர்மறைகளே தந்த பரம குருவாய் வந்த சரவணபவாநந்தனே. 12

சுப்பிரமணியர் விருத்தம்.

முற்றிற்று.

———